<u>சார்பு நீதிமன்றம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

முன்னிலை- திருமதி.சா.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் செவ்வாய்கிழமை

<u>வழக்கிடை மனு எண்.02/2025 in அசல் மனு எண்.**203/2024**</u>

1. சொக்கலிங்கம்

2. பூங்காவனம் அம்மாள்

3. சரத்பாபு

4. சரவணன்

5. சதீஷ் ......மனுதாரர்கள்/1, 4 முதல் 7 பிரதிவாதிகள்

/எதிர்/

1. லட்சுமி எதிர்மனுதாரர்/வாதி

2. ருக்குமணி அம்மாள்

3. ராதா ..... எதிர்மனுதாரர்கள்/2,3, பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 09.04.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. U.ஹரிகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. அசுருதீன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/2,3, பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.சிவபிரகாஷ் இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர்

உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

## <u>உத்தரவு</u>

இம்மனுவில் கண்டுள்ள ஆவணத்தை காலதாமத்துடன் தாக்கல் செய்துள்ளதை மன்னித்து மேற்படி ஆவணத்தை ஏற்க உத்தரவு பிறப்பிக்குமாறு கட்டளை VIII விதி 1 (3) பிரிவு உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### <u>2.1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>

2.1) இம்மனுவில் தான் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 1ம்பிரதிவாதி என்றும், தான் மேற்படி இம்மனுவினை தனக்காகவும், மற்ற மனுதாரர்கள் / 4, முதல் 7 பிரதிவாதிகளுக்காகவும், தாக்கல் செய்துள்ளதாகவும், தன் மீதும், மற்ற பிரதிவாதிகள் மீதும் வாதி பாகம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், இம்மனுவுடன் தாக்கலாகும் ஆவணம் தன் தரப்பில் விசாரணை செய்து நிரூபிப்பதற்கு தன் தரப்பில் மேற்படி ஆவணங்கள் கைசோர்ந்துவிட்டு தற்போது தான் கிடைக்கப்பெற்றதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணத்தினை தன் தரப்பில் குறியீடு செய்தால் தான் வழக்கின் உண்மை தன்மையை நீதிமன்றத்திற்கு தெளிவுப்படுத்த இயலும் என்றும், இல்லையேல் மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும் என்றும், மனு ஆவணங்கள் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்வதை ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. எதிர் மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:-**

(3.1) எதிர்மனுதாரர் மனுவில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது மனுதாரரின் கைவசம் இல்லை என்பதும் மேற்படி ஆவணங்கள் பின்னிட்டு தான் பதிவுத்துறையில் நகல்போட்டு வாங்கப்பட்டன என்பதும், மேலும் அவை நீண்ட தேடுதலுக்குப் பின் கிடைக்கப்பெற்றன என்பதும், எனவே அவைகளை உரிய காலத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்பதும் எனவே உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது சரியல்ல என்றும், மனுதாரர் மனுவுடன் கொடுத்துள்ள சில ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்களாகும். எனவே அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும், மேலும் மனுவில் கண்ட ஆவணங்கள் ஏன் உரிய காலத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதற்கான போதுமான காரணம் மனு சார்பாக பிராமாணப்பத்திரிக்கையில் சொல்லப்படவில்லை என்றும், மேலும் மேற்படி ஆவண்களில் மனுதாரர் தரப்பினர் இல்லை என்றும், அந்த வகையிலும் மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல என்றும், மேலும் மேற்படி ஆவணங்கள் உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கு மனுவில் சொல்லியுள்ள காரணங்களும் உண்மையல்ல என்றும், எனவே இம்மனுவை

எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. இங்கு தீர்மானிக்க வேண்டிய அம்சம் யாதெனில்:-**

**மனுதாரர் கோரியுள்ளவாறு மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணத்தை காலதாதமாக தாக்கல் செய்துள்ளதை மன்னித்து இந்த ஆவணத்தை ஏற்று உத்தரவிட வேண்டுமா, இல்லையா? என்பதேயாகும்.**

(i) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் இல்லை. இருதரப்பின் வாதம் கேட்கப்பட்டது. மேற்படி வாதி தன் மீது பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தன் தரப்பு நியாயங்களை தெரியப்படுத்தவும், நீதிமன்றத்திற்கு உண்மையை தெளிவுப்படுத்தவும், தன் தரப்பில் ஆவணம் தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்றும், மேற்படி வழக்கில் தன் தரப்பில் தற்போது விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தன் தரப்பு ஆவணத்தை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணத்தை ஏற்க வேண்டியது அவசியமானது என்றும், நியமானது என்றும், மேற்படி ஆவணம் தற்போது தன் தரப்பில் தாக்கல் செய்வது மிகவும் அவசியமாக உள்ளது என்றும், எனவே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாகவும், மேற்படி ஆவணத்தை ஏற்று அனுமதிக்கவேண்டும் என்று மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(ii) இம்மனுவின் மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது மனுதாரரின் கைவசம் இல்லை என்பதும் மேற்படி ஆவணங்கள் பின்னிட்டு தான் பதிவுத்துறையில் நகல்போட்டு வாங்கப்பட்டன என்பதும், மேலும் அவை நீண்ட தேடுதலுக்குப் பின் கிடைக்கப்பெற்றன என்றும், எனவே அவைகளை உரிய காலத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது சரியல்ல என்று, எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். மனுதாரர் மனுவுடன் கொடுத்துள்ள சில ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்களாகும், எனவே அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும், மேலும் மனுவில் கண்ட ஆவணங்கள் ஏன் உரிய காலத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதற்கான போதுமான காரணம் மனு சார்பாக பிராமாணப்பத்திரிக்கையில் சொல்லப்படவில்லை என்றும், மேலும் மேற்படி ஆவணங்களில் மனுதாரர் தரப்பினர் இல்லை என்றும், அந்த வகையிலும் மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவை இல்லை என்றும், மேலும் மேற்படி ஆவணங்கள் உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கு மனுவில் சொல்லியுள்ள காரணங்களும் உண்மையல்ல என்றும், எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(iii) அசல் வழக்கில் பிரதிவாதி எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்யாத ஆவணத்தை இந்நீதிமன்ற அனுமதியுடன் பின்னிட்டு தாக்கல் செய்ய வழிவகை

உள்ளது. மேற்படி ஆவணத்தை பொறுத்தவரை அதனை பெற்றுக்கொள்ளாமல் போனால் பிரதிவாதிகளின் தரப்பிற்கு குந்தகம் ஏற்பட்டு விடும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. இம்மனுவை தள்ளுபடி செய்வதற்கு போதுமான முகாந்திரம் இல்லை. மேற்படி ஆவணத்தின் தன்மை, சாட்சிய மதிப்பீடு மற்றும் வழக்குக்கு சம்மந்தப்பட்டதா போன்ற விவரங்கள் குறித்து வழக்கு விசாரணையின் போதும், தீர்ப்பின் போதும் தீர்மானிக்கப்படும். எனவே அவைகள் குறித்து ஆழமாக ஆராயாமல், காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணத்தைப் பெற்றுக்கொண்டு, இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

(iv) மேலும் இருதரப்பினர்களுக்கும் அவர்கள் தரப்பு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய போதிய வாய்ப்புகள் அளித்து இருதரப்பினர்களையும் தீர விசாரித்து இருதரப்பு ஆவணத்தை பரிசீலனை செய்து வழங்கப்படும் தீர்ப்பு நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக:-**

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.04.21 15:14:00 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.04.21 15:14:05 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.